# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2068/24 - 2018 අප්‍රේල් මස 26 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.26

*2068/24 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்

*திருத்தம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் XI ஆம் அத்தியாயத்தின் 70 ஆம் உறுப்புரையினால் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2068/1 ஆம் இலக்க மற்றும் 2018, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட பின்வரும், அதாவது "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் XI ஆம் அத்தியாயத்தின் 70 ஆம் உறுப்புரையின் (4) ஆவது உப உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி, மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இரண்டாயிரத்துப்பதினெட்டாம் ஆண்டு மே மாதம் எட்டாம் நாளன்று பி. ப. 02.15 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பாராளுமன்றக் கூட்ட மண்டபத்தில் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கப்படுகிறதென்பதை இத்தால் சகலரும் அறிந்துகொள்ள வேண்டும்" எனும் பிரகடனமானது "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பின் XI ஆம் அத்தியாயத்தின் 70 ஆம் உறுப்புரையினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய என்னால், இரண்டாயிரத்துப்பதினெட்டாம் ஆண்டு மே மாதம் எட்டாம் நாளன்று பி. ப. 02.15 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பாராளுமன்றக் கூட்ட மண்டபத்தில் பாராளுமன்றத்தைக் கூடுமாறு அழைக்கப்படுகிறதென்பதை இத்தால் சகலரும் அறிந்துகொள்ள வேண்டும்" எனத் திருத்தப்படுகின்றது.*

**ஒஸ்டின் பர்ணாந்து,**
*சனாதிபதியின் செயலாளர்.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2018, ஏப்பிறல் 26.*


1A - G 27316 — 377 (2018/04) *இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*